# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.

## MCOP. No.305/2018

2026–ம் ஆண்டு மார்ச் திங்கள் 05–ஆம் நாள் வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியமாகிய **ம.சா.1 வது** நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி. ஆ. பாப்பாத்தி, கிரேடு–1 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சின்னப்பிள்ளை | வயது | : | |
| த/பெ (அ) க/பெ | : | | தொழில் | : | |
| ஊர் | : | | வட்டம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

<u>முதல் விசாரணை:</u>

நான் இந்த வழக்கில் நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். நிருபண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். முதல்தகவல்அறிக்கை நகல் ம.சா.ஆ.1, பிரேதகூராய்வுஅறிக்கை ம.சா.ஆ.2, இறப்புசான்று நகல் ம.சா.ஆ.3, 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் மோட்டார்வாகனஆய்வாளர் அறிக்கை நகல் ம.சா.ஆ.4, 3ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் மோட்டார்வாகனஆய்வாளர் அறிக்கை நகல் ம.சா.ஆ.5, மனுதாரர்களின் குடும்பஅட்டை நகல் ம.சா.ஆ.6,

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை</u>:**

விபத்து சம்மந்தமாக நான் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. விபத்து நடந்தது 2012ம் வருடம் ஆகும். இழப்பீடு கேட்டு 2018ம் ஆண்டு இந்த மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். என்மகள் சுமதி பயணம் செய்த ஆட்டோவில் எத்தனை பேர் போனார்கள் என்று கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால் 2 பேர்கள் போனதாக தெரிந்தது. முதல்தகவல்அறிக்கையில் 11பேர்கள் பயணம் செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. என்மகள் பயணம் செய்த ஆட்டோவின் மீது எதிரில் வந்த ஆட்டோ மோதி விபத்து

ஏற்பட்டது என்று தெரிந்துகொண்டேன். எதிரில் வந்த ஆட்டோ ஓட்டுநர் மீது முதல்தகவல்அறிக்கை பதிவு செய்ததாக தெரிந்துகொண்டேன். விபத்தில் என்மகளுக்கு மட்டும் தான் அடிபட்டது. என்மகள் பயணம் செய்த ஆட்டோவில் பின்னால் நின்றுகொண்டு சென்றதாக நான் தெரிந்துகொண்டேன். என்மகளுக்கு திருமணம் ஆகவில்லை. என்மகனுக்கு திருமணம் ஆகிவிட்டது. என்னுடைய மகன் என்மகளின் வருமானத்தை சார்ந்து இல்லையென்பதால் அவரை பொறுத்து மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. என்மகளின் வருமானத்தை காண்பிக்க கூடிய ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்மகளின் கவனக்குறைவால் விபத்து நடந்தது என்றால் சரியல்ல. விபத்து 3ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநரின் கவனக்குறைவால் ஏற்பட்டது என்றாலும், சரக்கு வாகனத்தின் என்மகள் பயணம் செய்ததால் 2ம் எதிர்மனுதாரர் நஷ்டஈடுகொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளின் கீழ் அதிகமான நஷ்டஈடு கோரியுள்ளேன் என்றும், அது கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை:</u>

இல்லை.

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.